**சார்பு நீதிமன்றம், மேலூர்**
நாள் *:09.08.2024*
வா.சா.*1* – திரு.ராஜாமுகமது
*OS No.359/2021 :*
*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.*)*

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை *:***

காதர்மைதீன் என்னுடைய தந்தை என்றால் சரிதான். என் தந்தைக்கு இரண்டு தாரங்கள் என்றால் சரிதான். என் தாயார் பெயர் ஷகீனா பீவி. மற்றொரு தாரம் மரியம் பீவி. ஷகீனா பீவி முலமாக நான்*, 1, 2* பிரதிவாதிகள் குழந்தைகள் என்றால் சரிதான். மரியம்பீவி மூலமாக *3* முதல் *5* பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருக்கும் போதே *2*ம் தாரம் என் தந்தை திருமணம் முடித்தார். குறிப்பிட்டு என்னுடைய வழக்குரையில் *1992* பாகபிரிவினையில் என்ன மோசடி என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. *1992*ம் ஆண்டு பாகம் பற்றிய குறிப்புகளை வெள்ளைதாளில் தான் எழுதினோம், பத்திரத்தில் எழுதவில்லை என்று சாட்சி ஆவணத்தை பார்த்து மறுக்கிறார். மேற்படி பாகத்தில் *D* அட்டவணை சொத்தாக நாகுடிபள்ளம் தெருவில் உள்ள பழைய கதவிலக்கம் *70,* புதிய கதவிலக்கம் *79* உள்ள வீட்டை, கருத்தம்புளியம்பட்டியில் உள்ள ரீசர்வே எண்.*259/1*ல் *93* செண்டு நிலத்தையும், எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பாகவே மைதீன் பாத் என் பாட்டி கமால், ராஜாமுகமது, மற்றும் நூர்ஜஹான் உயில் எழுதிவைத்துவிட்டார்கள். மேற்படி உயில் எழுதிய விபரத்தை என் வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. பள்ளிவாசலில் வைத்து தான் பாகம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது, நான் அப்போது உடன் இருந்தேன். மேற்படி பாகத்தில் *B* அட்டவணை சொத்துக்களான செக்கடி தெருவில் உள்ள கதவு இலக்கம் *90*ல் உள்ள கடையும், சர்வே எண்.*119/3*ல் மேல்புறம் *45* செண்டு கமாலின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய சகோதரி நூர்ஜஹானுக்கு மேற்படி பாகத்தில் *C* அட்டவணை சொத்துக்களாக *13* செண்டு சொத்துக்கள் சர்வே எண்.*115/3B1* மற்றும் சர்வே எண்.*115/3B12,* சர்வேஎண்.*115/3B2A* ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினையில் *A* அட்டவணை சொத்துக்கள் காதர்மைதீன் என்னுடைய அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால்

சரிதான். மேற்படி வாய்மொழியாக பிரித்த பாகத்தை நினைவு கொள்வதற்காக *03.06.1995* அன்று எழுதப்பட்டது என்றால் சரியல்ல, *1996* ல் தான் எழுதப்பட்டது. மேற்படி *1996* ல் எழுதப்பட்ட ஆவணம் என்னிடம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அதை என்னால் தாக்கல் செய்ய முடியும். என் தந்தையும், வழக்கறிஞரும் சேர்ந்து மேற்படி ஆவணத்தை எழுதி வந்தார்கள். *1996* ம் ஆண்டு ஏற்பட்ட ஆவணத்தில் தான் மோசடியாக சம்பவங்கள் எழுதப்பட்டது. *1996* ம் ஆண்டு ஏற்பட்ட ஆவணத்தில் நானும் கையெழுத்து செய்துள்ளேன். என்னுடன் உடன்பிறந்த சகோதர, சகோதரியும் கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் பாகபிரிவினை செய்துகொண்டதன் ஞாபககுறிப்பு என்று சொல்லபடும் ஆவணத்தை தான் நான் தற்போது குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். மேற்படி ஞாபககுறிப்பிற்காக எழுதப்பட்ட ஆவணம் தான் *1995* ம் ஆண்டு எழுதப்பட்டது என்றும், நான் வழக்கிற்காக *1996* என்று தவறாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு எழுதப்பட்ட *A* அட்டவணை சொத்தான *3* இலக்க சொத்துக்களை ஒதுக்கியுள்ளார்கள் என்றால் சரிதான். செக்கடி தெருவில் புதிய கதவிலக்கம் *91* உள்ள கடை, சர்வே எண்.*119/3* ல் *1* ஏக்கர் *84* செண்டில் கீழ்புறம் கேணி உள்பட *45* செண்டு மற்றும் சர்வே எண்.*114/1B*, சேங்கைமேடு *17* செண்டு என் அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட *A* அட்டவணை சொத்துக்களில் மூத்ததாரத்து பிள்ளைகளான எங்களுக்கு பாகம் உள்ளது. மேற்படி *A* செடியூலில் கண்ட *3* அட்டவணை சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது அவசியமில்லாததால் சேர்க்கவில்லை. ஞாபககுறிப்பிற்காக எழுதப்பட்ட ஆவணம் தான் *03.06.1995* ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும், அதில் நானும், *1,2* பிரதிவாதிகளும் என் தந்தை காதர்மைதீனும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி *1995* ம் ஆண்டு ஏற்பட்ட ஆவணத்தில் *A* அட்டவணை சொத்துக்களிலோ அதன்பின்னர் காதர்மைதீன் கிரையம் பெறும் சொத்துக்களிலோ எனக்கோ, என் உடன்பிறந்த சகோதர, சகோதரிக்கோ பாகம் கிடையாது என்று எழுதப்பட்டிருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை, என்னிடம் அது காட்டப்படவில்லை. நானும், என் அக்கா நூர்ஜஹான், என்

அப்பாவும், கமால் மீது அ.வ.எண்.*278/1995* என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர் முன்பாக தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கினுடைய சான்றிட்ட நகல் சாட்சியிடம் காட்டப்படட்டு சாட்சி சரிதான் என்று ஒப்புக்கொள்ளவே மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.*1* ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கினுடைய தீர்ப்பாணை சாட்சியிடம் காட்டப்படட்டு சாட்சி சரிதான் என்று ஒப்புக்கொள்ளவே அது பி.வா.சா.ஆ.*2* ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த *25.01.2001* அன்று பிரபு வழக்கறிஞர் மூலமாக என் சார்பாக என் தந்தைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். சாட்சியிடம் மேற்படி ஆவணம் காட்டப்பட்டு சாட்சி சரிதான் என்று ஒப்புக்கொள்ளவே அது பி.வா.சா.ஆ.*3* ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பிற்கு என் தந்தை பதிலறிவிப்பு கொடுத்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் எனது வழக்கறிஞரை சென்று பார்த்தேன், அப்போதே பதில் அறிவிப்பு கிடைக்கபெற்றது என்றும் அது தெரிந்தும் நான் இல்லையென்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் *07.02.2007*ம் ஆண்டு மரியம்பீவிக்கு வா.சா.ஆ.*3* அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கான பதில் அறிவிப்பு வா.சா.ஆ.*4* என்றால் சரிதான். வா.சா.ஆ.*4* ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக படித்து பார்க்கவில்லை என்று தவறாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. அந்த பதில் அறிவிப்பில் என் தகப்பனார் எனக்கு கொடுத்த *2001* பதில் அறிவிப்பை பற்றி குறிப்பிட்டுள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. என் தந்தை சர்வே எண்.*406/9* வழக்கு சொத்தானது என் தந்தை, மீனாட்சி ஆட்சியிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தாகும். சர்வே எண்.*408/3*ல் *95* செண்டையும், வழக்கு சொத்தையும், நானும் எனது அண்ணனும், என் அப்பாவும் உழவடை செய்து வந்தோம் என்றும், அந்த சொத்தை அதன் உரிமையாளரிடம் இருந்து கிரையம் வாங்கும் போது அந்த கிரையத்தொகையில் நானும் பங்கு கொடுத்ததாகவும், அதனை பிரிக்கும் போது, எனக்கும், என் அண்ணனுக்கும் *15* செண்டு தருவதாக பேசப்பட்டது என்றும் குறிப்பிட்டு பி.வா.சா-ஆ.*3* அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான்.

மீனாட்சி ஆட்சி வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள சொத்தை பஞ்சவர்ணம் என்பவற்கு பிறகு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். பஞ்சவர்ணத்திற்கும் எனது தகப்பனாருக்கும் பரிவர்த்தனை ஏற்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. கமால் என்பவர் *1* ம் பிரதிவாதி என்னுடன் பேசிக்கொள்வார். என்னுடன் சேர்ந்து தான் வழக்கை நடத்துகிறாரா என்றால் இல்லை. சர்வே எண்.*259/1* ல் கருத்தப்புளியம்பட்டியில் உள்ள சொத்துக்களை பாண்டி என்பவருக்கு *2009* ம் ஆண்டு அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி அடமானம் வைத்த சொத்தை *30.12.2011* அன்று மீட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வீட்டை தான் அடமானம் வைத்தேன், நிலத்தை அல்ல. நான் வீட்டை பாண்டிக்கு தான் வைத்தேன். எனக்கு ஒதுக்கப்பட்ட *93* செண்டில் கடந்த *14.11.2019* அன்று *15* செண்டை என் அண்ணன் கமால் *1* ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை கமால், பரிமளம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் மீண்டும் பரிமளத்திடம் இருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கமால், பரிமளத்திற்கு கிரையம் கொடுத்த பத்திரம் காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று ஒப்புக்கொள்ளவே அது பி.வ.சா.ஆ.*4* ஆக குறியீடு செய்யப்படுகிறது. பரிமளத்திடம் இருந்து என் தகப்பனார் கிரையம் பெற்ற பத்திரம் சாட்சியிடம் காட்டப்பட்டு சாட்சி அதை பற்றி தெரியாது என்று குறிப்பிடுகிறார். கமாலுக்கு கொடுத்த *45* செண்டு அதை அவர் திருநாவுக்கரசு என்பவரிடம் விற்பனை செய்துவிட்டார். நான் என் அண்ணனுக்கு கொடுத்த *15* செண்டுக்கான ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என் தகப்பனார் பாகத்திற்கு பிறகு அவருக்கு ஒதுக்கப்பட்ட *A* அட்டவணை சொத்துக்களைபொாறுத்தும் அதற்கு பிறகு அவர் கிரையம் பெற்ற இதர சொத்துக்களை பொறுத்தும், எனக்கோ, என் சகோதர சகோதரிகளான *1, 2* பிரதிவாதிகளுக்கோ எந்த உரிமையும் கிடையாது என்றும், மரியம் பீவியின் வாரிசுகளான *3* முதல் *5* பிரிரதவாதிகளுக்கு தான் உரிமையுள்ள சொத்துக்கள் என்றால் சரியல்ல. பாகத்திற்கு பின்னிட்டு என் தந்தை கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்தையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் விற்பனை

செய்தது போக மீத சொத்துக்களை சேர்த்துள்ளேன். ஏற்கனவே பாகம் பிரித்து நினைவு படுத்தக்கூடிய ஆவணமாக எழுதப்பட்ட *03.06.1995* ல் ஆவணத்தில் *A* அட்டவணை சொத்துக்களை பொறுத்தோ, அதன்பின்னிட்டு என் தந்தை கிரையம் பெறும் சொத்துக்களை பொறுத்தோ, அந்த பத்திரத்தில் உள்ள *2, 3, 4* நபர்களாகிய எங்களுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் அது தவறாகும், அது பின்னிட்டு அவர்களாக எழுதிக்கொண்டது. முன்பு எழுதிய பத்திரத்தில் அவ்வாறு இல்லை. அதை ஒப்புக்கொண்டு தான் நான் பத்திரத்தில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் எழுதப்பட்ட போது அவ்வாறு இல்லை.ஏற்கனவே உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த வழக்கில் மேற்படி பாகம் நினைவூட்டும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் தற்போது காட்டப்படும் *03.06.1995* தேதியிட்ட ஆவணம் என்றும், அது தற்போது எனக்கு முரணாக இருக்கிறது என்பதற்காக நான் அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது என் தந்தைக்கு மட்டும் பாத்தியப்பட்டு, அது தொடர்ந்து *3* முதல் *5* பிரதிவாதிகளான மரியம் பீவியின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அதை பொறுத்து நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. மேற்படி பின்னிட்டு வாங்கக்கூடிய சொத்துக்களை மரியம்பீவியின் வாரிசுகளுக்கு பாத்தியம் என்றும் *1996* ம் ஆண்டு ஏற்படுத்த ஆவணத்தில் காட்டப்படவில்லை என்று சாட்சி தாமாக முன்வந்து கூறுகிறார்.

*(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)*

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா**
**சார்பு நீதிபதி,**
**மேலூர்**